வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC.106/2018 |
| வழக்கு சாட்சி | : | PW 10 |
| நாள் | : | 18.11.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாரதி (IO) | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | Inspector of Police |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை கடலோர காவல் பாதுகாப்பு குழுமத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2016ந் தேதி திருத்தணி காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்த போது 09.10.2016ந் தேதி காலை 09.30மணிக்கு வாதி மதன் த/பெ.புருஷோத்தமன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூல புகாரைப் பெற்று திருத்தணி காவல்நிலைய குற்றஎண் 640/2016 சட்டபிரிவுகள் 120(பி), 341, 324, 506 (2), 302 இதச மற்றும் சட்டபிரிவுகள் 4(2), 5 Explosive Substances Act 1908, பிரிவு 3(1) பொதுசொத்து சேதம் தடுப்பு சட்டம் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த புகார் **அ.த.சா.ஆ.24 ஆகும்.** மற்றும் முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ 25 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு சம்பவயிடத்திற்கு சென்று காலை 11மணியளவில் சாட்சிகள் சீரஞ்சீவி தர்மன் மற்றும் அர்ஜீனன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அ.த.சா.ஆ26 மற்றும் அ.த.சத.ஆ27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலிருந்த இரத்தம் தோய்ந்த மண்

மற்றும் சாதாரண மண் ஆகியவற்றை பகல் 12.15 மணிக்கு மகசரில் கைப்பற்றினேன் அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ28 ஆகும்.** மேற்கண்ட இரத்தம் தோய்ந்த மண் மற்றம் சாதாரண மண் ஆகியவை **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆகும். அதே சாட்சிகள் முன்னிலையில் மேற்படி சம்பவயிடத்தில் கைப்பிடி அளவு கண்ணாடி துகள் 12.30 மணிக்கு மகசரில் கைப்பற்றினேன் அது **அ.த.சா.ஆ29 ஆகும்** மேற்படி கண்ணாடி துகள் **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு அங்கிருந்து புறப்பட்டு திருத்தணி அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கின் இறந்துபோன ஆறுமுகம் (எ) ஆப்பிள் ஆறுமுகம், என்பவரின் பிரேதத்தின் பேரில் அதே நாளில் பகல் 13.00 மணி முதல் 15.00 மணிவரை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை ஒன்றை தயார் செய்தேன் மேற்கண்ட பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ30 ஆகும்.** பின்னர் இறப்பின் உண்மையான காரணத்தை அறியும் பொருட்டு பிரேதத்தை திருத்தணி காவல்நிலை தலைமை காவலர் 408 திரு.தேவன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டி திருத்தணி அரசு மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பினேன். சாட்சிகள் மதன், பூவரசன், சித்ரா, பாபு, நாகராஜ், சுரேஷ், தேன்மொழி, தேவி, டில்லி, சுரேஷ் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் சிரஞ்சீவி தர்மன், அர்ஜீனன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்துபோன ஆறுமுகம், சம்பவத்தின் போது வந்த TN-20-BA-3663 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளைநிற முன்புற கண்ணாடி மற்றும் வலது புற இரண்டு கண்ணாடி, இடதுபுற இரண்டு கண்ணாடி உடைந்த Scorpio கார், பூவரசன் என்பவர் அன்றைய தினமே 18.00மணிக்கு திருத்தணி காவல்நிலையத்தில் ஆஜர் படுத்தியதை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ 31 ஆகும்.** பிறகு 18.15 மணிக்கு மேற்படி பூவரசன் கெரோசின் வாடையுள்ள துணியால் செய்யப்பட்ட வெடிகுண்டு-1 ஆஜர் படுத்தியதை படிவம் 91ல் கைப்பற்றினேன். அது **அ.த.சா.ஆ 32 ஆகும்.** பிறகு பூவரசன் 18.30 மணிக்கு ஆஜர் படுத்திய

பெட்ரோல் வாடையுள்ள பாலீத்தின் காலி கவர்-1 படிவம் 91ல் கைப்பற்றினேன். **அ.த.சா.ஆ.33 ஆகும்.** பின்னர் தகவலின் பேரில் 13.10.2016ந் தேதி காலை 05.30 மணிக்கு திருத்தணி ஆர்.கே.பேட்டை சாலை பொதட்டூா் பேட்டை ரோடு சந்திப்பில் இவ்வழக்கின் எதிரிகளான ராஜேஷ் (எ) ராஜேஷ் குமார், ஜாகீர்உசேன் (எ) ஜாகீர், பிரேம்குமார் (எ) பிரேம், சின்னசாமி, ஆகியோர்களை அடையாளம் கண்டு கைதிற்கான காரணத்தை கூறி கைதுசெய்து விசாரிக்க அவர்கள் தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்தார்கள். அதன்படியே ராஜேஷ் (எ) ராஜேஷ்குமார் கொடுத்த வாக்குமூலத்தை கிரிஸ்டோபர் மற்றும் குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ 34** ஆகும். அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவரிடமிருந்த TN-20-CD-4850 பதிவு எண் கொண்ட Yamaha FZ கருப்பு நிற மோட்டார் சைக்கிள், செல்போன் Samsung black and white colour மற்றும் பதிவு எண் இல்லாத மஞ்சள் நிற ஆட்டோ, பாலித்தின் கவரில் இருந்த மிளகாய் பொடி சுமார் 200 கிராம் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் அந்த கைப்பற்றுதல் மகசர்கள் முறையே **அ.த.சா.ஆ 35 முதல் அ.த.சா.ஆ 37 ஆகும்.** பின்னர் எதிரி ஜாகீர்உசேன் (எ) ஜாகீர் என்பவர் அன்றைய தினமே அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ 38 ஆகும்.** அதன் அடிப்படையில் இரத்தகரை படிந்த 76செ.மீ நீளமுள்ள இரும்பு ராடு ஒன்று, இரத்தகரை படிந்த கருப்பு வெள்ளை கோடு போட்ட லோயர் ஒன்று இரண்டுபக்கமும் நீலநிறத்தில் கப்பல் படம் போட்ட கருப்புநிற டிசைன் கொண்ட நெக் பனியன் ஒன்று ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினேன் அந்த கைப்பற்றுதல் மகசர்கள் முறையே **அ.த.சா.ஆ 39 முதல் அ.த.சா.ஆ 40 ஆகும்.** மேற்கண் இரும்புராடு **சா.பொ.4 முதல் சா.பொ.6** ஆகும். பின்னா் எதிரி பிரேம்குமார் (எ) பிரேம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ 41 ஆகும்.** அதன் அடிப்படையில் எதிரி அஜர்படுத்திய இரத்தகரை படிந்த

கருப்பு சிவப்பு பு ளூ வெள்ளை கட்டம் போட்ட லோயர் ஒன்று, சிமெண்ட் கலரில் அரைகை நெக் பனியன் இரண்டு கைகளிலும் கருப்பு பாடர் முன்பக்கத்தில் இடது பக்கம் கார்மல் என்ற எழுத்து பொறிக்கப்பட்ட எம்பிராய்டரி போட்டது ஆகியவற்றை கைபற்றுதல் மசரில் கைப்பற்றினேன் அது **அ.த.சா.ஆ 42 ஆகும் மற்றும்** மேற்கண்டவை **சா.பொ.7 மற்றம் சா.பொ.8 ஆகும்.** பின்னர் எதிரி சின்னசாமி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ 43 ஆகும்.** அதன் அடிப்படையில் எதிரி ஆஜர்படுத்திய கார்பன் கருப்பு சிவப்பு கலர் செல்போன் ஒன்றை மகசரில் கைப்பற்றினேன் அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ 44 ஆகும்.** மேற்கண்ட செல்போன் **சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி எதிரிகளின் கைது குறித்து அவர்களின் உறவினர்க ளுக்கு கைதுகுறிப்பாணை மூலம் தெரிவித்தேன். பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னா் இவ்வழக்கின் தலைமறைவாக இருந்த எதிரிகள் வடிவேல் மற்றும் ராஜதுரை (எ) ராஜேஷ் ஆகியோர்களை 15.10.2016ந் தேதி காலை 10.30 மணிக்கு தகவலின் பேரில் திருத்தணி சென்னை சாலையில் வேலஞ்சேரி சாலை சந்திப்பில் அடையாளம் கண்டு கைதிற்கான காரணத்தை கூறி சாட்சிகள் பிரபாகரன் நாயுடு, குமார் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து எதிரிகள் வடிவேல், ராஜதுரை (எ) ராஜேஷ் ஆகியோர்களிடம் ஒப்புதல் வாக்குமூலங்கள் பெற்றேன் அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் முறையே **அ.த.சா.ஆ.45 மற்றும அ.த.சா.ஆ 46** ஆகும. மேலும் எதிரி வடிவேல் ஆஜர்படுத்திய TN-20-CA-2527 பல்சர் மோட்டார் சைக்கிள், பாலித்தீன் கவரில் இருந்த கெரோசின் துணியால் ஊறவைத்த துணிபந்து-1, சிகார் லைட்டர்-1 மற்றும் இரத்தகரை படிந்த சிமெண்ட கலர் பேண்ட் -1 இரத்தம் படிந்த கட்டம் போட்ட பச்சை அரைக்கை சட்டை -1 மற்றும் 3 கத்திகள், ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் அந்த கைப்பற்றுதல் முறையே **அ.த.சா.47 முதல் அ.த.சா.ஆ 50 ஆகும்.** மேற்கண்டவைகள் முறையே **சா.பொ. 10 முதல் சா.பொ.14 ஆகும்.** அதன்பிறகு எதிரி ராஜதுரை (எ) ராஜேஷ் அளித்த ஒப்புதல்

வாக்குமுலத்தின் அடிப்படையில் அவர் ஆஜர் படுத்திய சாம்சங் செல்போன் -1 Honor Android celphone -1 ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அவை **அ.த.சா.51 ஆகும்.** அவை **சா.பொ.15 மற்றும் சா.பொ.16 ஆகும்.** பின்னர் மேற்கண்ட இவ்வழக்கின் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னா் எதிரிகளை சாட்சிகள் அடையாளம் காண வேண்டி அடையாள அணிவகுப்பு நடத்த நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பிறகு எதிரியிடமிருந்து கைப்பற்றிய கெரோசின் ஊரவைத்த துணியால் செய்யப்பட்ட வெடி பொருட்களை செயலஇழக்க வைக்க நீதிமன்றம் மூலம் ADGP Operations அவர்களுக்கு கடிதம் அனுப்ப நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. பின்னர் எதிரி கிரண் (எ) கிரண் சாய் என்பவர் நீதிமன்றத்தில் சரண்டர் ஆகிவிட்டதால் அவரை காவலில் எடுத்து விசாரிக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவரை 16.12.2016ந் தேதி காவலில் எடுத்து சாட்சிகள் பிரபாகர் நாயுடு, குமார் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன் அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ 52 ஆகும். பிறகு எதிரி கணேசன் (எ) கபாலி என்பவர் நீதிமன்றத்தில் சரண்டர் ஆகிவிட்டதால் அவரை காவலில் எடுத்து விசாரிக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவரை 23.12.2016ந் தேதி காவலில் எடுத்து சாட்சிகள் பிரபாகர் நாயுடு, குமார் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன் அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ 53 ஆகும். மேலும் மேற்கண்ட வழக்கில் கைப்பற்றி சொத்துகளை படிவம் 91 மூலம் நீதிமன்றதிற்கு அனுப்பி வைத்தேன் அவை முறையே அ.த.சா.54 வழக்கில் கைப்பற்றிய வெடிமருந்து பொருட்களை இரசாய பகுப்பாய்விற்கு அனுப்ப நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் பெற்றேன் அதன்பிறகு நான்மருத்துவ விடுப்பில் சென்றதால் பொருப்பு ஆய்வாளா் திரு.பாலாஜி அவர்களிடம் இவ்வழக்கின் கோப்புகளை ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இந்த வழக்கில் நான் தான் புகாரை பெற்று முதல் தகவல்**

அறிக்கை பதிவு செய்தேன். புகார் காலை 9.30 மணிக்கு எனக்கு கிடைத்தது. வழக்கின் படி சம்பவம் நடந்த சமயம் காலை 7.50 மணி ஆகும். முதல் தகவல் அறிக்கையில் காளம் 8–ல் காலதாமதம் பற்றி குறிப்படவில்லை என்றால் சரிதான். காளம் 7–ல் இரண்டு எதிரிகள் பெயர் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் கண்ணுற்ற சாட்சிகள் அணைவரும் 4 நபர்கள் தான் சம்பவ இடத்தில் இருந்தாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். வரைப்படம் நான் தான் தயார் செய்தேன். சம்பவ இடத்தில் அருகில் புதிய காவல் நிலையத்திற்குண்டான கட்டுமான பணி நடைப்பெற்றுக்கொண்டிருந்து என்றால் சரிதான். என்னுடைய வரைபடத்தின் படி தேவி, காசி, கேசவன் மற்றும் டில்லி ஆகியோரின் வீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது. காவல் நிலையம் கட்டப்பட்டிருந்த இடத்தில் இருந்த நபர்களையோ அல்லது அருகில் இருந்த வீடுகளின் நபர்களையோ விசாரிக்கவில்லை என்றால் அப்போது யாரும் இல்லை, அப்போது கேசவனின் மனைவி மற்றும் தேவி ஆகியோரை விசாரணை செய்துள்ளேன். இறந்த ஆறுமுகம் அ.தி.மு.க கட்சியின் அப்போதைய கவுண்சிலர் என்றால் சரிதான். அந்த கால கட்டததில் தமிழ்நாட்டை அந்த கட்சி தான் ஆண்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை செய்யும் போது ஆறுமுகத்திற்கும் கிரன்சாய்க்கு முன் விரோதம் இருந்தது தெரியவந்தது. இந்த வழக்கில் புகாரும், எனது விசாரணையும் அப்போதைய ஆளும கட்சி கொடுத்த அழுத்ததின் காரணமாக மேற்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. முதலில் 2 எதிரிகளை குறிப்பிட்டு அதன் பின் 1ம் எதிரியை சேர்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்ப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பெறப்பட்ட புகார் விசாரித்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள்

பார்வைமகஜர், கைப்பற்றுதல் மகஜர், வரைப்படம், பிரேத விசாரணை அறிக்கை, ஒப்புதல் வாக்குமூலங்கள் அனைத்தும் திட்டமிட்டு ஆளும் அரசின் அழுதத்தின் காரணமாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கு எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சரியாக விசாரணை செய்யாமல் பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.11.18 10:18:18 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.